31.05.2016

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## விலங்குகளிடமிருந்து வேளாண் பயிரை பாதுகாத்திட "ஹெர்போலிவ்' பயன்படுத்தலாம்: உதவி இயக்குநர் தகவல்



வேளாண் பயிர்களை எலி, காட்டுப்பன்றி, காட்டு பறவைகள் பாதிப்பிலிருந்து பாதுகாத்திட ஹெர்போலிவ் என்ற மருந்தை பயன்படுத்தலாம் என்று அனக்காவூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

விவசாயிகள் சாகுபடி செய்துள்ள நெல், மணிலா மற்றும் கரும்பு பயிர்களில் எலியின் பாதிப்பு, காட்டுப்பன்றி மற்றும் காட்டுப் பறவைகளின் அழிவிலிருந்து பாதுகாக்கவும், பயிர்களுக்கு வளர்ச்சி ஊக்கியாகவும், நோய் எதிர்ப்பு

சக்திக்காகவும் ஹெர்போலிவ் என்ற மருந்தை பயன்படுத்தி பயன் பெறலாம். இந்த மருந்து தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தால் சான்றளிக்கப்பட்ட மருந்தாகும்.இது எலியின் தாக்கத்தில் இருந்து பயிரை பாதுகாக்கிறது. இந்த மருந்தை பயன்படுத்துவதால், நிலத்தின் சத்துக்கள் அதிகமாகிறது.

நீர்பிடிக்கும் தன்மை மற்றும் நீர் தேங்கினால் பயிர் கெடாமல் இருக்கவும் செய்கிறது. விளை பொருள்களில் உள்ள உயிர் சத்துக்கள் உடலுக்கு அதிகமாக கிடைக்கச் செய்கிறது. விளை பொருள்களின் இருப்பு தன்மை அதிகரிக்கிறது.

ஹெர்போலிவ் மருந்தை அனைத்துப் பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். ஒரு லிட்டர் மருந்துடன் 9 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

மேலும் தகவல் அறிய விரும்பும் விவசாயிகள் 98423 17805 செல்லிடப்பேசி எண்ணில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என அந்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## வறட்சி காலத்தில் மண்ணின் ஈரம் காக்க விவசாயிகள் கையாள வேண்டிய நுட்பங்கள்: வேளாண்துறை யோசனை

வறட்சி காலத்தில் மண்ணின் ஈரம் காக்க விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து பழனி வேளாண்துறை அதிகாரி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

பழனி வேளாண்துறை உதவி இயக்குநர் சுருளியப்பன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சாகுபடி செய்த பயிர்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் வைக்கோல் அல்லது தென்னை நார்க் கழிவு போன்றவைகளை நிலப் போர்வையாக இருக்குமாறு நன்கு தூவி விட்டு, சூரிய ஒளிக்கதிர்கள் நேரடியாக பூமியில் படுவதை தடுக்கலாம். இம்முறையில் நீர் பாய்ச்சப்பட்ட நிலங்களில் நீர் ஆவியாவதை தடுப்பது மட்டுமல்லாமல் களை வளர்வதையும் கட்டுப்படுத்தலாம்.

கோடையில் சாகுபடி செய்யப்பட்ட இறவை மக்காச்சோளம், பயறு வகைகளில் மேற்க்கண்டபடி மூடாக்கு போடுவதாலும், நீர் தேவை அறிந்து நீர்ப்பாய்ச்சுவதாலும், மகசூல் இழப்பைக் குறைக்கலாம்.

மேலும் மாலை நேரங்களில் நீர் பாய்ச்சும் பணியினை செய்து நீண்ட நேரம் வரை மண் ஈரம் காத்து வறண்ட சூழலிலிருந்து பயிரைக் காக்கலாம்.

மலைப்பகுதிகளில் ஆழச்சால் அகலப்பாத்தி முறையினை கடைபிடித்து, கோடை மழை கிடைக்கும் போது மழைநீரை வழிந்தோடச் செய்வதன் மூலமும் நிலத்தின் ஈரத்தன்மையை அதிகப்படுத்தலாம். மேலும் நீர் பாய்ச்சும் போது, மண் ஈரம் நீண்ட நேரம் காத்திட, ஒரு பாத்தி விட்டு மறு பாத்தி நீரைப் பாய்ச்சினால் மிகவும் ஏற்றதாக இருக்கும். குறைந்த நீரைக் கொண்டு மரப்பயிர்கள், சாகுபடி செய்யப்பட்ட கரும்பு போன்ற பயிர்களைக் காக்க சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப்பாசன முறைகளையும், இலைவழி உரம் தெளிப்பு, நீரில் கரையும் உரம் போன்றவற்றை கையாளலாம். முருங்கை சாகுபடியில் ஊடுபயிராக நிலக்கடலை, உளுந்து அல்லது வெங்காயம் போன்ற பயிர்களை சாகுபடி செய்தலில் உள்ள நீர் மேலாண்மையால் இரட்டிப்பு வருமானம் கிடைக்கும்.

வரப்புப் பயிராக ஆமணக்கு பயிரிடலாம். காலையில் வெயில் வரையிலும், மாலை வெயிலின் தாக்கம் குறைந்த நேரத்திலும் விவசாயப் பணிகளாகிய களையெடுத்தல், மருந்து தெளித்தல், உரமிடல் போன்ற பணிகளை மேற்கொள்வதால் விவசாயிகள் உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொடைக்கானலில் மழை: அருவிகளுக்கு நீர்வரத்து

கொடைக்கானலில் திங்கள்கிழமை மாலை பரவலாக நல்ல மழை பெய்ததால் அருவிகளுக்கு நீர் வரத்து ஏற்பட்டுள்ளது.

கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் குறைந்து மேக மூட்டத்துடன் அவ்வப்போது சாரல் மழை பெய்து வருகிறது. இதனால் கொடைக்கானலில் குளுமையான சீதோஷன நிலை நிலவி வருகிறது. இந்நிலையில் திங்கள்கிழமை அதிகாலை முதல் மேகமூட்டம் காணப்பட்ட நிலையில் மாலையில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக கொடைக்கானல், அப்சர்வேட்டரி, நாயுடுபுரம், செண்பகனூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பரவலாக நல்ல மழை பெய்தது. இந்த மழையால் பொது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். இதன் மூலம் நீர்வரத்து பகுதிகளான வெள்ளி நீர் வீழ்ச்சி, பியர் சோழா அருவி, வட்டக்கானல் அருவி, பாம்பார் அருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் வரத்து தொடங்கியுள்ளது.

## காற்றாலை மின் உற்பத்தி அதிகரிப்பு

தேனி மாவட்டத்தில் தென்மேற்கு பருவக் காற்று தொடங்கியுள்ளதால், காற்றாலை மின் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 24 ஆயிரம் யூனிட்டாக அதிகரித்துள்ளது.

மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி, ஜி.உசிலம்பட்டி, கண்டமனூர், ஆத்தங்கரைப்பட்டி, கோவிந்த நகரம், சீப்பாலக்கோட்டை, தப்புக்குண்டு, தாடிச்சேரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 500-க்கும் மேற்பட்ட காற்றாலைகள் செயல்பட்டு வருகின்றன.

கடந்த சில நாள்களாக மாவட்டத்தில் பரவலாக தென்மேற்கு பருவக் காற்று வீசத் தொடங்கியுள்ளதால், காற்றாலைகளில் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு வாரத்துக்கு முன் வரை நாள் ஒன்றுக்கு 4,000 யூனிட்டாக இருந்த காற்றாலை மின் உற்பத்தி, தற்போது 24 ஆயிரம் யூனிட்டாக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கோடை உழவின் அவசியம் பற்றி பயிற்சி அளிக்க கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் கோரிக்கை

கோடை உழவின் அவசியம் பற்றி கம்பம் பள்ளத் தாக்கு விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை அதிகாரிகள் பயிற்சி அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்திலுள்ள கம்பம் பள்ளத்தாக்கில் 14,707 ஏக்கர் பரப்பளவில் முல்லைப் பெரியாறு கால்வாய் பாசனம் மூலமாக இரு போக நெற்பயிர் விவசாயம் நடைபெறுகிறது. மார்ச் மாதத்தில் நிறைவு பெறும் 2 ஆம் போக நெற்பயிர் விவசாயத்தை தொடர்ந்து கால்வாய்களில் நீர் வரத்து இருக்காது. இதையடுத்து அப்பகுதிகளில் நிலத்தை உழவு செய்து மானாவாரிப் பயிர்களான உளுந்து, பாசிப்பயறு உள்ளிட்ட பயறு வகைகளை விதைத்து கோடை உழவு செய்வதுண்டு. ஆனால் கம்பம் பள்ளத்தாக்கில் கடந்த சில ஆண்டுகளாக கோடை உழவின் முக்கியத்துவம் குறைந்து விட்டது என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறியதாவது: கோடை உழவு மூலம் பெருமளவில் களைகளை கட்டுப்படுத்த முடியும். அவ்வாறு செய்யாத நிலத்தில் மேல் மண் அரிமானம் ஏற்படுவதோடு மண்ணிலுள்ள ஊட்டச் சத்துகள் விரையமாகும். இந்த உழவு பணியால் மறுஉழவு செய்து விவசாயப் பணிகள் மேற்கொள்ள

சுலபமாவதோடு, அடிமண் இறுக்கம் நீங்கி விளைச்சலும் அதிகரிக்கும். எனவே விவசாயிகள் கோடை உழவு செய்வது மிகவும் முக்கியம்.

ஆனால் இந்த ஆண்டு கோடை மழை பொய்த்த காரணத்தால் பெரும்பாலான விவசாயிகள் உழவு பணியை மேற்கொள்ளவில்லை. இதனால் கம்பம் பள்ளத்தாக்கு நெல் வயல்கள் தரிசு நிலங்களாக காட்சி அளிக்கின்றன. வேளாண்மைத் துறையினர் விவசாயிகளுக்கு கோடை உழவின் அவசியம் குறித்துப் பயிற்சி அளிக்காமல் அலட்சியம் காட்டுவதை நிறுத்தி விட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

## விளைச்சலை அதிகரிக்க விதைகளை பரிசோதனை செய்ய வேண்டும்: விதைச்சான்று அலுவலர் அறிவுறுத்தல்

விளைச்சலை அதிகரிக்க விதைகளை உரிய பரிசோதனைக்கு பிறகே பயன்படுத்த வேண்டும் என விவசாயிகளுக்கு விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறை வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து விதைச் சான்று பரிசோதனை அலுவலர் சு.வெங்கடாசலம் வெளியிட்டுள்ள செய்தி:

வேளாண்மைத் துறையின் வளர்ச்சியில் விதை முக்கியப்பங்கு வகுக்கிறது. நல்ல மரபுப் பண்புகளோடு, புறத் தூய்மை, நல்ல முளைப்புத்திறன், குறிப்பிட்ட அளவு ஈரத்தன்மை மற்றும் பூச்சி, நோய் தாக்கப்படாத விதைகளே நல்ல விதைகள் ஆகும்.

விதைப் பரிசோதனை நிலையங்கள், சான்று விதை, ஆய்வாளர் விதை மற்றும் பணி விதை என மூன்று மாதிரிகளை அளிக்கின்றன. இதில், சான்று விதைகள் வயல் தரத்தில் தேர்வு பெற்று அறுவடை செய்யப்பட்ட சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்தம் செய்யப்பட்ட பின் விதைச் சான்று அலுவலர்களால் மாதிரி எடுத்து விதைத் தரம் காண அனுப்பப்படும்.

விதைப் பரிசோதனை நிலையத்தில் மாதிரிகள் பெறப்பட்டவுடன் விதைகளின் புறத்தூய்மை, பிற ரகக் கலப்பு மற்றும் ஈரப்பதம் ஆகியவை முதலில் பரிசோதனை செய்யப்படும். புறத்தூய்மை பரிசோதனைக்குப் பிறகு முளைப்புத் திறன் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்படும்.

இதில், ஒவ்வொரு விதைக்கும் குறைந்தபட்சம் எத்தனை சதவீதம் முளைப்புத் திறன் இருக்க வேண்டும் என நிர்ணயம் செய்யப்படுகிறது. பின்பு விதையின்

புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன் மற்றும் பிற ரகக் கலப்பு ஆகியவற்றின் முடிவறிக்கை அறிவிக்கப்படும்.

விதைப் பரிசோதனை நிலையத்தில் ஒரு மாதிரி பெறப்பட்டு பரிசோதனை மேற்கொண்டு முடிவுகள் அறிவிக்க அதிகபட்சம் 30 நாள்கள் வரை தேவைப்படும். எனவே விவசாயிகள் தங்களின் விதைகளை உரிய பரிசோதனை செய்து தரத்தை அறிந்து விதைப்பை மேற்கொள்ள வேண்டும். மேலும், விதைகளை நடப்பு பருவத்திற்கு முன்பே அனுப்பித் தரத்தை தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு விதை மாதிரியைப் பரிசோதனை செய்ய அரசு அதிகம் செலவிடுகிறது. ஆனால், விவசாயிகளின் நலன் கருதி மிகக் குறைந்த கட்டணமாக ரூ.30 மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

எனவே விதைகளை உரிய பரிசோதனைக்குப் பிறகு நடவு செய்து விளைச்சலை அதிகரிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ.15 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட்டத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.15 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நடைபெற்றது.

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வரத்து அதிகரித்து 802 நிலக்கடலை மூட்டைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. முதல் ரக நிலக்கடலை குவிண்டால் ரூ.6050 முதல் ரூ. 6, 600 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ.5,310 முதல் ரூ.5,800 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ.4,450 முதல் ரூ.5,250 வரையிலும் ஏலம்போனது. மொத்தம் ரூ.15 லட்சத்து ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் திருப்பூர், தாராபுரம், அவிநாசி, அன்னூர், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், கோபி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 240 விவசாயிகளும், 9 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## தரம் வாய்ந்த பால் உற்பத்தி ஆலோசனைக் கூட்டம்

ஈரோடு ஆவின் ஒன்றியம் சார்பில், மொடக்குறிச்சி ஒன்றியத்தில் தரமான பால் உற்பத்தி குறித்த ஆலோசனைக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு, ஈரோடு ஆவின் தலைவர் பி.சி.ராமசாமி தலைமை வகித்தார். ஆவின் மேலாளர் (பால் சேகரம்) வரதராஜன் வரவேற்றார். துணைப் பதிவாளர் (பால் வளம்) ராஜா முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில், தரமான பால் உற்பத்தி குறித்து விளக்கி கூறப்பட்டது.

தரம் குறைந்த பால் உற்பத்தி செய்யும் உறுப்பினர்களுக்குத் தேவையான உதவிகளை சங்கம் மூலமாக செய்யும் முறைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. தரமான பாலை உற்பத்தி செய்யும் சங்கங்களுக்கும், உறுப்பினர்களுக்கும் சிறப்புச் சலுகைகள் வழங்குவது குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

இதில், ஈஞ்சம்பள்ளி கூட்டுறவுச் சங்கத் தலைவரும், பிகேபி பள்ளித் தாளாளருமான பிகேபி அருண், சின்னதிருமங்கலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சிவக்குமார் உள்ளிட்ட தலைவர்கள், பணியாளர்கள், செயலாளர்கள் 100-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

## விழுப்புரத்துக்கு 1,200 டன் அரிசி அனுப்பிவைப்பு

நீடாமங்கலத்திலிருந்து விழுப்புரத்துக்கு 1,200 டன் சன்னரக அரிசி பொது விநியோகத் திட்டத்துக்கு சரக்கு ரயிலில் திங்கள்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை, மன்னார்குடி வட்டக் கிடங்கு ஆகியவற்றிலிருந்து 1,200 டன் சன்னரக அரிசி நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு 100 லாரிகளில் திங்கள்கிழமை கொண்டுவரப்பட்டது.

சுமை தூக்கும் தொழிலாளர்கள் அரிசி மூட்டைகளை சரக்கு ரயிலின் 21 பெட்டிகளில் ஏற்றினர். இதைத் தொடர்ந்து, அரிசி மூட்டைகள் பொது விநியோகத் திட்டத்துக்காக சரக்கு ரயிலில் விழுப்புரத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இப்பணிகள் நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

## "கால்நடைகளுக்கு காப்பீடு செய்து பயன்பெறலாம்'

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கு காப்பீடு செய்து பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருவாரூர் மாவட்டத்தில் பருவமழை காலங்களில் ஏற்படும் இயற்கை சீற்றத்தினால் கால்நடைகளின் இறப்பு அதிகளவில் ஏற்படுகிறது. இதனால் விவசாயிகள் பொருளாதார அளவில் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இதை ஈடுசெய்யும் வகையில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் கால்நடைகள் காப்பீட்டுத் திட்டம் 2014 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்கீழ் 2015-16 ஆம் ஆண்டுக்கு திருவாரூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் 3,740 கால்நடைகள் காப்பீடு செய்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு அருகிலுள்ள கால்நடை நிலையங்களை அணுகி விவரங்களைப் பெறலாம் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சூறாவளியுடன் பலத்த மழை: குடியிருப்பில் தண்ணீர் புகுந்தது

அந்தியூர்: அந்தியூர் சுற்றுவட்டார பகுதியில், நேற்று மாலை சூறாவளிக்காற்றுடன் மழை பெய்தது. வாரச்சந்தையில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்கள் காற்றில் பறந்தன. பொருள் வாங்க வந்த பொதுமக்கள் ஓட்டம் பிடித்தனர். அந்தியூர் பஸ் ஸ்டாண்ட் அருகில் சாக்கடை வசதி இல்லாத குடியிருப்பு பகுதிகளில், மழை நீர் புகுந்தது. மேட்டூர் சாலையில் பள்ளிபாளையம் அருகே, சாலையில் மரம் விழுந்ததால், சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தவிட்டுப்பாளையம், பிரம்மதேசம் பிரிவில் உள்ள சாக்கடை தூர்வாரப்படமால் இருந்ததால், மழைநீருடன் கழிவுகளும் சாலையில் வெள்ளமாக ஓடியது.

## நிறம் மாறிவரும் தேயிலை செடிகள்

மஞ்சூர்: மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் அதிகளவில் தேயிலை விவசாயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுக்கு பின், நடப்பாண்டில் மழை இல்லாமல் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, தேயிலை செடிகள் நிறம் மாறுவதுடன், சில பகுதிகளில் கருகியுள்ளன. தேயிலைக்கு போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதியடைந்து வரும் நிலை ஒருப்புறம் இருக்க, தற்போதைய பாதிப்பு நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளது.

எனவே, தேயிலை வாரியம்; தோட்டக்கலை துறையினர், இந்த பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ஜூன் 7ம் தேதி செம்மறியாடு வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி

கரூர்: கரூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி தலைவர் வசந்தகுமார் அறிக்கை: பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், வரும், ஜூன், 7ம் தேதி செம்மறியாடு, வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி நடக்கிறது. பயிற்சியில் அறிவியல் ரீதியான ஆட்டினங்களை தேர்வு செய்தல் மற்றும் இனப்பெருக்கம், ஆடு வளர்ப்பில் பராமரிப்பு முறைகளான பரண் மேல் கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை ஆடுகளுக்கேற்ற பசுந்தீவன உற்பத்தி, ஆடுகளை தாக்கும் நோய்கள் மற்றும் அவற்றை தடுக்கும் முறைகள் போன்ற தலைப்புகளில் பயிற்சி வழங்கப்பட உள்ளது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## வடமாநில உளுந்தம்பருப்பு வரத்து அதிகரிப்பு: குவிண்டாலுக்கு ரூ.500 விலை சரிவு

சேலம்: வடமாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் உளுந்தம்பருப்பு வரத்து அதிகரித்துள்ளதால், குவிண்டாலுக்கு, 500 ரூபாய் விலை சரிந்துள்ளது.

தமிழகத்தின் பருப்பு தேவை, 15 சதவீதம், நமது மாநிலத்தில் பூர்த்தி செய்யப்பட்டாலும், 85 சதவீத பருப்பு, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தரபிரதேசம், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்தே விற்பனைக்கு வருகிறது. அந்த மாநிலங்களில், கோடையில், பயறுவகைகள் பூக்கும் தருவாயில், மழையால், விளைச்சலில் கடும் சரிவு ஏற்பட்டது. குறைந்த அளவில் விளைந்த பயறுவகைகள், அந்தந்த மாநிலத்தின் தேவையை மட்டும் பூர்த்தி செய்வதாக இருந்ததால், தமிழகத்துக்கான பருப்பு வரத்து முற்றிலும் இல்லை. அமெரிக்க டாலருக்கு இணையான இந்திய ரூபாயின் மதிப்பு உயர்ந்ததால், மியான்மர், துருக்கி, கனடா ஆகிய நாடுகளில் இருந்து பருப்பை இறக்குமதி செய்ததாலும், அவற்றின் போக்குவரத்து செலவு, மத்திய, மாநில அரசுகளின் வரி ஆகியவற்றின் காரணமாக, இந்தியாவில் விற்கும் விலைக்கே, விற்கவேண்டிய நிலைக்கு வியாபாரிகள் தள்ளப்படுகின்றனர். பயறு, பருப்பு விலை, சில மாதங்களாக ஜெட் வேகத்தில் உயர்ந்தது.

இந்த நிலையில், வடமாநிலங்களில், விவசாயிகள் தங்களின் இருப்பு, பயறு, பருப்பு வகைகளை விற்பனை செய்ய துவங்கி உள்ளனர். தேர்தலால் சரிந்த பருப்பின் வரத்து, அதிகரிக்க துவங்கி உள்ளது. கடந்த மாதம் வரை, தமிழகத்துக்கு, வாரத்துக்கு, 50 லாரிகளில் வந்த உளுந்தம்பருப்பின் வரத்து, தற்போது, 100 லாரிகளாக அதிகரித்துள்ளது. இதனால், குவிண்டாலுக்கு, 500 ரூபாயும், கிலோவுக்கு, 5 ரூபாயும், உளுந்தம்பருப்பின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. சேலம் மாவட்ட மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் பெரியசாமி கூறுகையில், "வடமாநில உளுந்தம்பருப்பின் வரத்து, சற்று அதிகரித்துள்ள நிலையில், விற்பனை இல்லாததால், மொத்த வியாபாரிகள் பருப்பு விலையை குறைப்பு செய்துள்ளனர். இந்த சரிவு மேலும் அதிகரிப்பது, பருப்பு, பயறு வரத்தை பொறுத்து அமையும்," என்றார்.

**கோடை மழையால் கரியக்கோவில் அணை நீர் மட்டம் கிடுகிடு உயர்வு**

ஆத்தூர்: கோடை மழையால், ஆத்தூர் அருகே, கரியக்கோவில் அணை நீர் மட்டம், 15.25 அடியாக உயர்ந்துள்ளதால், வசிஷ்ட நதி பாசன விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டம், ஆத்தூர் அருகே, கல்வராயன் மலை பகுதியில் உற்பத்தியாகும் வெள்ளாற்றின் குறுக்கே, பாப்பநாயக்கன்பட்டி கிராமத்தில், கரியக்கோவில் அணை உள்ளது. 350 ஏக்கர் பரப்பளவில், 53 அடி உயரத்தில், 190 மில்லியன் கன அடி தண்ணீர் தேங்கும் வகையில் அமைந்துள்ள அணையில் இருந்து, பாப்பநாயக்கன்பட்டி, தும்பல், இடையப்பட்டி, ஏத்தாப்பூர் உள்ளிட்ட கிராமங்களில், 3,600 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

குட்டை போல் தண்ணீர்: கரியக்கோவில் அணை பாசனம் மற்றும் குடிநீர் ஆதாரமாக உள்ளது. கடந்த, 2015 நவம்பர், டிசம்பர் மாதம் பெய்த மழையில், அணை முழுமையாக நிறைந்து காணப்பட்டது. அதன்பின், ஆறு மற்றும் கால்வாய் பாசனம், குடிநீர் தேவைக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. கோடை வெயில் காரணமாக ஏப்ரல் முதல், மே, 15ம் தேதி வரை, கரியக்கோவில் அணையின் நீர் மட்டம், 3.87 அடியாக இருந்தது. அணையில் குட்டை போல் தண்ணீர் தேங்கி நின்றது. நீர் பிடிப்புக்கு தேவையான மழை இல்லாததால், ஆறுகளில் நீரோட்டம் இல்லை; அணைகள், ஏரிகள் உள்ளிட்ட நீர் நிலைகள் வறண்டு காணப்பட்டன.

15 நாளில் 13 அடி உயர்வு: இந்நிலையில், மே மாதம், அக்னி நட்சத்திரம் துவக்கம் முதல், அவ்வப்போது மழை பெய்து வந்தது. கடந்த, 15 நாளில், கரியக்கோவில் அணைக்கு, ஆறுகளில் இருந்து கணிசமான அளவில் தண்ணீர் வந்தது. தற்போது, மழை குறைந்ததால், விநாடிக்கு, 13 கன அடி நீர் வருகிறது. நேற்று, கரியக்கோவில் அணையின் நீர் மட்டம், 15.25 அடி உயரத்தில், 20.67 மில்லியன் கன அடி நீர் உள்ளது. அணை நீர் மட்டம், 'பூஜ்ஜியம்' நிலைக்கு போக இருந்த நிலையில்,

கோடை மழையால், 15 நாளில், 13 அடி உயரம் தண்ணீர் உயர்ந்துள்ளது. அதனால், கரியக்கோவில் அணை மற்றும் வசிஷ்ட நதி பாசன விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கோடை காலத்தில் பெய்த மழையால், நீர் நிலைகளில் தண்ணீர் மட்டம் உயர்ந்து வருவதுடன், விளைநிலங்கள் ஈரப்பதமாக உள்ளதால், பயிர் சாகுபடியை விவசாயிகள் துவங்கியுள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஆனைமலை புலிகள் காப்பகத்தில் வன விலங்கு கணக்கெடுப்பு நிறைவு**



பொள்ளாச்சி : ஆனைமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட பொள்ளாச்சி வனக் கோட்டக்கில், கோடைகால வன விலங்கு கனக்கெடுப்பு நேற்றுடன் நிறைவடைந்தது. ஆனைமலை புலிகள் காப்பகத்தில் பொள்ளாச்சி வனக் கோட்டம், உடுமலை வனக் கோட்டம் என இரண்டு கோட்டங்களிலும் மொத்தம் 6 வன சரகங்கள் உள்ளன. இந்த வன பகுதிகளில், இந்த ஆண்டில் கடந்த ஜனவரி

மாதம் புலிகள் கணக்கெடுப்பு நடந்தது. இதை தொடர்ந்து, கடந்த 24ம் தேதிமுதல் கோடைகால வன விலங்கு கணக்கெடுப்பு துவங்கியது. பொள்ளாச்சி வனக்கோட்டத்திற்குட்பட்ட பொள்ளாச்சி, உலாந்தி (டாப்சிலிப்), வால்பாறை, மானாம்பள்ளி வனப் பகுதிகளில் வனக்காப்பாளர், வேட்டைத் தடுப்பு காவலர் மற்றும் இயற்கை ஆர்வலர்கள் உள்பட 4 பேர் கொண்ட குழுவினர் என மொத்தம் 60 குழுக்களாக பிரிக்கப்பட்டு வன விலங்கு கணக்கெடுக்கப்பட்டது.

அவர்கள் திசைகாட்டும் கருவி, நிலைமானி, தூரம் அளக்கும் கருவி, கயிறு உள்ளிட்டவைகள் பயன்பாட்டுக்கு வைத்திருந்தனர். கணக்கெடுப்பின்போது, யானை மற்றும் கடமான்கள் அதிகம் கண்ணில் தென்பட்டுள்ளது. ஆனைமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட பகுதியில் வன விலங்கு கணக்கெடுப்பை கள இயக்குனர், மாவட்ட வன அலுவலர் மற்றும் வனச் சரகர்கள் சென்று கண்காணித்தார். ஆனைமலை புலிகள் காப்பகத்தில் கோடைகால வனவிலங்கு கணக்கெடுப்பு நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், விலங்குகளின் கால்தடம், நீர்நிலை, முடி உதிர்தல் உள்ளிட்டவைகளை ஆராய்ந்து எடுக்கப்பட்ட கணக்கெடுப்பை சேகரித்து அனுப்பும் பணி நடப்பதாக வனத்துறையினர் தெரிவித்தனர்.

## சேலத்தில் 3வது நாளாக கொட்டி தீர்த்த மழை

சேலம், : தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் தொடங்கியதும், 108 டிகிரி வரை வெயில் கொளுத்தியது. இதனால் பொது மக்கள் கடும் அவதி அடைந்து வந்தனர். இதனிடையே வெப்ப சலனம் காரணமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கோடை மழை பெய்துவருகிறது.

கடந்த 2 நாட்களாக சேலத்தில் கனமழை பெய்தது. அக்னி நட்சத்திரத்தின் கடைசி நாளான நேற்று முன்தினம் மழை கொட்டி தீர்த்தது. இந்த மழையினால், தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் மழைநீர் புகுந்தது. சேலத்தில் 42.6 மி.மீட்டர் மழை பெய்தது. மாவட்டத்தில் ஏற்காடு 14.2 மி.மீ., கெங்கவல்லி 13.4 மி.மீ., ஓமலூர் 15.2 மி.மீ., மேட்டூர் 28.2 மி.மீ என மொத்தம் 113. 6 மி.மீ மழை பதிவானது.

இந்நிலையில், நேற்று மாலை 5 மணிக்கு மழை பெய்தது. சுமார் அரை மணி நேரம்

பெய்த மழையால், சாலைகளில் மழைநீர் தேங்கியது. தொடர்ந்து 3வது நாளாக பெய்த மழையினால் இரவு முழுவதும் குளிர்ச்சியான சீதோஷ்ணம் நிலவியதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## ஆத்தூர், தலைவாசலில் காய்கறி விலை கிடுகிடு உயர்வு

ஆத்தூர், : சேலம் மாவட்டம் ஆத்தூர், தலைவாசல் பகுதியில் உள்ள தினசரி மார்க்கெட்களில் வரத்து குறைவால் காய்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், சேலம் மாவட்டத்தில் காய்கறி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், மார்க்கெட்களுக்கு காய்கறி வரத்து குறைந்து, விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு கிலோ ரூ.30க்கு விற்பனையான தக்காளி நேற்று உழவர் சந்தை மற்றும் தலைவாசல் தினசரி மார்க்கெட்டில் கிலோ ரூ.50க்கு விற்பனை செய்யப்பட்டது. தலைவாசல் பகுதியில் அதிக அளவு சாகுபடி செய்யப்படும் பச்சை மிளகாய், தற்போது விளைச்சலே இல்லை என்கிற நிலை உள்ளது. இதனால் தலைவாசல் பகுதிக்கு பெங்களூரிலிருந்து பச்சை மிளகாய் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

இதையடுத்து, பச்சை மிளகாய் கிலோ ரூ.70 முதல் ரூ.80 வரை விற்பனை செய்யப்பட்டது. இதே போல் பீன்ஸ் கிலோ ரூ.100க்கும் கேரட் ரூ.80க்கும் விற்பனையானது. கத்தரிக்காய் கிலோ ரூ.14 முதல் ரூ.16 வரையிலும், வெண்டை, புடலங்காய், பீர்க்கன் உள்ளிட்ட காய்கறிகள் கிலோ ரூ.25க்கும் சின்னவெங்காயம் ரூ.30முதல் ரூ.40வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், செடிகளிலேயே காய்கறிகள் கருகி விடுவதால் விளைச்சல் குறைந்து, விலை கடுமையாக உயர்ந்து வருகிறது.

## சேவூரில் ரூ.15 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

அனுப்பர்பாளையம், ; அவிநாசி அருகே சேவூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் ரூ.15 லட்சத்துக்கு ஏலம் நேற்று நடைபெற்றது. 802 நிலக்கடலை மூட்டைகள் ஏலத்துக்கு வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.6,050 முதல் ரூ.6,600 வரையிலும், இரண்டாவது ரகம் குவிண்டால் ரூ.5,310 முதல் ரூ.5,800 வரையிலும், மூன்றாவது ரகம் குவிண்டால் ரூ.4,450 முதல் ரூ.5,250 வரையிலும் ஏலம்போனது. மொத்தம் ரூ.15 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நடைபெற்றது. அன்னூர், மங்கரசவலையபாளையம் புளியம்பட்டி, மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், சேவூர், நம்பியூர் பகுதிகளில் இருந்து 240 விவசாயிகளும் ஈரோடு, திருச்செங்கோடு, மணப்பாறை பகுதிகளில் இருந்து 9 வியாபாரிகளும் பங்கேற்றனர். இந்த தகவலை சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளார் ராஜு தெரிவித்துள்ளார்.

## மஞ்சள் விலை குவின்டால் ரூ.7 ஆயிரத்திற்கு சரிவு

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி ரகம் 60 குவின்டாலும், கிழங்கு ரகம் 40 குவின்டாலும் என மொத்தம் 100 குவின்டால் விற்பனையானது. தேவராயபுரம், போளுவாம்பட்டி பகுதியை சேர்ந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதை கோவை, பொள்ளாச்சி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். விலை விரலி மஞ்சள் குவின்டால் ரூ.7,060 முதல் ரூ.9,609 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.8,800. விற்பனை மதிப்பு ரூ.15.28 லட்சம். கிழங்கு மஞ்சள் குவின்டால் ரூ.7,709 முதல் ரூ.8,777 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.8,200. விற்பனை மதிப்பு ரூ.3.28 லட்சம். இரண்டு ரகமும் சேர்ந்து ரூ.8.56 லட்சத்திற்கு விற்றது. கடந்த 3 வாரங்களாக மஞ்சள் விலை சரிந்த நிலையிலேயே உள்ளது. விலை விரலி மஞ்சள் குவின்டால் ரூ.200ம், விரலி மஞ்சள் குவின்டால் ரூ.400ம் சரிந்துள்ளது. பல மாதங்களுக்கு பிறகு குறைந்தபட்ச விலை ரூ.7 ஆயிரத்திற்கு சரிந்ததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர்.

## பச்சை மிளகாய் வரத்து குறைந்தது ஒரு கிலோ ரூ.85க்கு விற்பனை

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு பச்சை மிளகாய் வரத்து குறைந்துள்ளதால், ஒரு கிலோ ரூ.55க்கு விற்பனை செய்யப்படுகிறது.

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து காய்கறிகள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. தக்காளி, கத்தரி, வெண்டை, பூசணி, பச்சை மிளகாய் உள்ளிட்டவை சுற்றுவட்டார கிராமங்களில் இருந்தே அதிகளவில் வருகிறது. இதில் பச்சை மிளகாய் திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழனி, உடுமலை பகுதிகளில் இருந்து அதிகளவு கொண்டு வரப்படுகிறது. இதில் இந்த ஆண்டு துவக்கத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தாலும், பல கிராமங்களில் பச்சை மிளகாய் சாகுபடி அதிகமாக இருந்தது. இதனால், கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் என சில மாதமாக அறுவடை செய்யப்பட்ட பச்சை மிளகாய் வரத்து மார்க்கெட்டுக்கு அதிகமாக கொண்டு வரப்பட்டது. வரத்து அதிகமாக இருந்ததால், வியாபாரிகள் அதனை ரூ.35 முதல் ரூ.40 வரை என குறைந்த விலைக்கு விற்பனை செய்தனர். இந்நிலையில், சுற்றுவட்டார கிராமங்களிலும், வெளியிடங்களிலும் பச்சை மிளகாய் சாகுபடி சற்று குறைந்ததாக கூறப்படுகிறது. இதனால், கடந்த சில வாரமாக பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு பச்சை மிளகாய் வரத்து மிகவும் குறைந்துள்ளது. வரத்து குறைந்ததையடுத்து அதனை கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. நேற்று மார்க்கெட்டில் ஒரு கிலோ பச்சை மிளகாய் ரூ.80 முதல் ரூ.85 வரை என கூடுதல் விலைக்கு போனது. வரும் நாட்களில் வரத்து இன்னும் குறைந்தால், விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## காற்றாலைகளில் மின் உற்பத்தி அதிகரிப்பு ஜூலை வரை நீடிக்கும் வாய்ப்பு

கோவை, : தமிழகத்தில் தென்மேற்கு பருவ காற்றால் காற்றாலைகளில் தற்போது தினசரி 3,500 மெகாவாட் முதல் 3,800 மெகாவாட் மின் உற்பத்தியாகிறது. இது வரும் ஜூலை வரை நீடிக்கும் வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது. தமிழகத்தில் பல்லடம், உடுமலை, தேனி, திருநெல்வேலி, கயத்தாறு, கன்னியாகுமரி, தூத்துக்குடி உள்ளிட்ட பகுதிகளில் 11,800 காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. இவை தினசரி 7,800 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை.

ஆண்டுதோறும் தென்மேற்குபருவகாற்று காலம் ஏப்ரல் கடைசி அல்லது மே முதல்வாரத்தில் துவங்குவது வழக்கம். ஆனால், இப்பகுதிகளில் கடந்த மார்ச் 21ம் தேதி முதல் லேசானது முதல் அதிகமானது வரையிலான காற்று வீசியது.

இதன் மூலம் தென் மேற்கு பருவ காற்று காலம் முன்கூட்டியே துவங்கியதால் காற்றாலைகளில் முன்கூட்டியே மின் உற்பத்தி துவங்கியது. துவக்கத்தில் காற்றாலைகளில் தினசரி 400 மெகாவாட் உற்பத்தியான மின்சாரம் படிப்படியாக உயர்ந்து வந்தது. கடந்த ஒரு வாரமாக தினசரி 3,500 மெகாவாட் முதல் 3,800 மெகாவாட் வரை உற்பத்தியாகிறது. தென்மேற்கு பருவ காற்று ஏப்ரல் அல்லது மே மாதம் துவங்கி ஜூலை அல்லது ஆகஸ்ட் வரை நிலவும், தற்போது இரண்டரை மாதம் காற்றாலையில் மின்சாரம் உற்பத்தியாகியுள்ளது. வரும் ஜூலை வரை நீடிக்கும் வாய்ப்புள்ளது. இதனால் இந்த ஆண்டு உற்பத்தியாகும் காற்றாலை மின்சாரம் கடந்த ஆண்டைவிட அதிகமாக இருக்கும் என்று காற்றாலை அதிபர்கள் எதிர் நோக்கியுள்ளனர்.

**பருத்தி கொள்முதல் விலை குறைவு**

கோவை, : தமிழகத்தில் அறுவடையாகி, விற்பனைக்கு வந்து கொண்டிருக்கும் பருத்தி கிலோ ரூ.40 முதல் ரூ.43 வரை வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த விலை குறைவாக உள்ளதால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். தமிழகத்தில் நெல், கரும்பு பயிர்களுக்கு மாற்றாக பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. இத்தகைய பருத்தி சாகுபடி அரியலூர், பெரம்பலூர், சேலம், கடலூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் நவம்பர், டிசம்பரில் விதைக்கப்பட்டு ஜனவரி, பிப்ரவரியில் பஞ்சு விற்பனை செய்யப்படும். காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகை, திருச்சி ஆகிய பகுதிகளில் பிப்ரவரியில் விதைக்கப்பட்டு மே, ஜூன் மாதங்களில் விற்பனை செய்யப்படுகிறது.

விவசாயிகள் தங்களது பருத்தியை நேரடியாக வியாபாரிகளிடமும், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலும் விற்பனை செய்கின்றனர். தற்போது வியாபாரிகள் ஒரு கிலோ பருத்தியை ரூ.40 முதல் 43 வரை கொள்முதல் செய்கின்றனர். இந்த விலை கட்டுப்படியாகாது என்கின்றனர் விவசாயிகள். ஒழுங்குமுறை விற்பனை

கூடங்களில் விலை சற்று கூடுதலாக கிடைத்தாலும், பெரும்பாலான விவசாயிகள் வியாபாரிகளிடம் முன்கூட்டியே முன்பணம் வாங்கியுள்ளதால், வியாபாரிகள் நிர்ணயிக்கும் விலைக்கு விற்க வேண்டிய நிலை உள்ளது. ஆனால், ஆந்திரா, கர்நாடகா பருத்தியை விட தமிழகத்தில் பருத்தியின் தரம் குறைவாக உள்ளதால் விலை அதற்குண்டான விலை வழங்கப்படுகிறது என்கின்றனர் வியாபாரிகள். பருத்தியின் தரத்தை உயர்த்தவும், அதற்குண்டான விலை கிடைக்கவும் விவசாயிகளுக்கு தேவையான சலுகைகளை இந்திய பருத்தி கழகம் மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். கோவை, : கோவை மொத்த காய்கறி மார்க்கெட், உழவர் சந்தை ஆகியவற்றிற்கு காய்கறி வரத்து 3ல் 1 பங்கு குறைந்துள்ளதால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கோவை மாவட்டத்திலுள்ள சில்லரை விற்பனை நிலையங்கள் மற்றும் கேரளாவிற்கு தேவையான காய்கறிகள் கோவை மேட்டுப்பாளையம் ரோட்டிலுள்ள எம்ஜிஆர் மொத்த மார்க்கெட்டிற்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகிறது. ஆர்.எஸ்.புரம், சிங்காநல்லூர் ஆகிய உழவர் சந்தைகளுக்கு கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து காய்கறிகள் விற்பனைக்கு வருகிறது.

கடந்த ஒரு மாதமாக நிலவும் கடும் கோடை காரணமாக நீர்ப்பாசனம் குறைந்து காய்கறி மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் 3ல் 1 பங்கு வரத்து குறைந்துள்ளது. இதே போல் கர்நாடகா, ஆந்திரா மாநிலத்தில் இருந்து தமிழகத்திற்கு வரும் காய்கறி வரத்தும் குறைந்துள்ளது. இதனால் மொத்த மார்க்கெட், உழவர் சந்தைகள் மற்றும் சில்லரை விற்பனை நிலையங்களில் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

வழக்கமாக மொத்த மார்க்கெட்டில் விற்கப்படும் விலையை விட உழவர் சந்தையில் 15 சதவீதம் அதிகமாகவும், உழவர் சந்தையில் விற்கப்படும் விலையை விட சில்லரை விற்பனை நிலையங்களில் 15 முதல் 25 சதவீதம் வரை உயர்வாகவும் காய்கறி விற்கப்படுவது வழக்கம்.

நேற்று ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் விற்பனையான காய்கறி விலை நிலவரம் (அடைப்புக்குறிக்குள் கடந்த 1ம் தேதி நிலவிய விலை) : கத்தரி ரூ.16-24(12-18),

வெண்டை ரூ.20-38 (20-30), நாட்டு தக்காளி ரூ.42-54 (26-30), ஆப்பிள் தக்காளி ரூ.40-52 (28-32), அவரை ரூ.50-66 (24-28), புடலை 25-36 (18-28), பீர்க்கங்காய் ரூ.36-48(24-35), பாகற்காய் ரூ.32-48 (24-34), கொத்தவரை ரூ.24-30(20-24), பூசணி ரூ.8-14(10-12), அரசாணிக்காய் ரூ.10-15 (12-16), பச்சை மிளகாய் சம்பா ரூ.60-70 (26-30), பச்சை மிளகாய் குண்டு ரூ.60-80 (30-54), சின்ன வெங்காயம் ரூ.28-36 (8-12), பெரிய வெங்காயம் ரூ.10-16 (14-16), முருங்கை ரூ.31-46(24-30), வாழைக்காய் ரூ.18-24(10-16), சேனைக்கிழங்கு ரூ.40-48(35-40), காளான் ரூ.180(130), உருளைக்கிழங்கு ரூ.24-42 (24-38), முள்ளங்கி ரூ.24-36(12-22), முட்டைக்கோஸ் ரூ.20-26(16-20), காலிபிளவர் ரூ.28-40 (24-40), பீன்ஸ் (சாதா) ரூ.50-70 (28-40).இந்த விலை உயர்வால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கூறுகையில், 'கோவை மாவட்ட பகுதிகளில் ஜூன் மாதம் முதல் மழை பொழிவு துவங்கும் வாய்ப்புள்ளதால், காய்கறி வரத்து அதிகரிக்கும், விலை குறையும்' என்றனர்.

**பறவை காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பணிகள் தீவிரம்**

ஓசூர்,: கர்நாடகாவில் பறவை காய்ச்சல் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து தமிழகத்தில் பறவை காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்காக, ஓசூர் ஜூஜூவாடி பகுதியில் 24 மணி நேரமும் கண்காணிப்பு தடுப்பு சோதனை சாவடி அமைக்கப்பட்டு, கர்நாடகாவில் இருந்து வரும் வாகனங்களுக்கு கிருமி நாசினி மருந்து தெளிக்கும் பணி நடந்து வருகிறது. இதை தமிழக கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் பாலகிருஷ்ணரெட்டி நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக்கு பின்னர் அமைச்சர் பாலகிருஷ்ணரெட்டி நிருபர்களிடம் கூறியதாவது: கர்நாடக மாநிலத்தை தொடர்ந்த, தமிழகத்தில் பறவை காய்ச்சல் பரவாமல் தடுக்க, தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி தமிழக - கர்நாடக எல்லைகளான ஓசூர் ஜூஜூவாடி, அந்திவாடி, பேரிகை, கக்கனூர், பாகலூர், மற்றும் பர்கூர் அருகே குருவிநாயனப்பள்ளி ஆகிய இடங்களில் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. கர்நாடகாவில் இருந்து, தமிழகத்துக்கு வரும் அனைத்து வாகனங்களுக்கும் பறவை காய்ச்சல் நோய் தடுப்பு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது.

ஓசூர் ஜூஜூவாடியில் தேசிய நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டுள்ள நோய் தடுப்பு மையத்தில், 24 மணி நேரமும் மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டு, நாள்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்களுக்கு விசை தெளிப்பான்கள் மூலம் மருந்து தெளிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணிகளுக்கு தேவையான அனைத்து மருந்துகள் மற்றும் உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளது. அனைத்து வாகனங்களுக்கும் கிருமி நாசினி மருந்து தெளிக்கும் பணி தொய்வின்றி நடைபெற மருத்துவ குழுவிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இந்த ஆய்வின் போது மண்டல இணை இயக்குனர் செல்லத்துரை, ஓசூர் நகராட்சி தலைவர் (பொறுப்பு) ராமு மற்றும் கால்நடைத்துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## ஜப்பான் நாட்டு தேசிய பழமான பெர்சிமென் பழ சீசன் துவக்கம்

குன்னூர்,: குன்னூர் தோட்டக்கலை துறைக்கு சொந்தமான பழப்பண்ணையில் பல்வேறு வகையிலான பழ மரங்கள் உள்ளது. இதில் சீசனுக்கு ஏற்றார் போல் விளையும் பழங்களை சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்வதுடன் இதன் மூலம் ஜாம், ஜெல்லி மற்றும் பழ ரசங்களும் இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்டு சுற்றுலா தலங்களில் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் குன்னூரில் ே◌தாட்டக்கலை துறையினருக்கும் கணிசமான வருவாய் கிடைத்து வருகிறது.

இந்நிலையில் தற்போது ஜப்பான் நாட்டு தேசிய பழமான பெர்சிமென் பழ சீசன் துவங்கி உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் போது இப்பண்ணையில் 140 மரங்கள் நடவு செய்யப்பட்டது. இதில் தற்போது 90 மரங்கள் மட்டுமே உள்ளது. இந்த மரத்தில் ஆண்டுதோறும் மே இறுதி முதல் ஜூலை இறுதி வரை சீசன் காலமாகும். பெர்சிமென் பழங்கள் அதிகளவில் காய்த்துள்ளது. ஆரெஞ்சு பழ வடிவில் தக்காளி போல் காட்சி அளிக்கும் இப்பழத்தில் விட்டமின் சத்துக்கள் அதிகளவில் உள்ளது. இப்பழம் தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்திலுள்ள குன்னூர் சிம்ஸ்பூங்காவிலுள்ள பழப்பண்ணையில் மட்டுமே பயிரிடப்பட்டு வருகிறது. இந்தியாவில் அழிந்து வரும் பழ வகைகளில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இப்பழத்தை பறித்து எத்தனால் திரவத்தில் போட்டு நன்கு ஊற வைத்த பின்னர் 2 நாள் கழித்து அதனை சுத்தம் செய்து சாப்பிட வேண்டும். மருத்துவ குணம் கொண்ட இந்த பழத்திற்கு சுற்றுலா பயணிகள் மத்தயில் பெரும்

வரவேற்பு கிடைத்துள்ளது. ஒரு கிலோ பெர்சிமென் பழம் ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனை உள்ளூர்வாசிகள் மட்டுமல்லாமல் சுற்றுலா பயணிகளும் அதிகளவில் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

## விதைகளே இல்லாத காய்கறிகள் மரபு ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தும் இயற்கை வேளாண் ஆர்வலர் தகவல்

பெரம்பலூர்,: விதைகளே இல்லாத காய்கறிகள் மரபுரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தும் என பெரம்பலூர் அருகே நடந்த பயிற்சிப் பட்டறையில் இயற்கை வேளாண் ஆர்வலர் முசிறி யோகநாதன் கூறினார். பெரம்பலூர் அருகேயுள்ள எளம்பலூர் உப்போடையில் உள்ள செந்தமிழ் இயற் கைப்பண்ணையில், காய்கறிகள் கீரைவளர்ப்பு பயிற்சிப்பட்டறை நேற்று நடந்தது.

இதில் தமிழ்நாடு முழுவதுமுள்ள அழிந்து வரும் நாட்டுவகை விதைகளைச் சேகரித்துப் பராமரித்து வரும் இயற்கை ஆர்வலரான முசிறி யோகநாதன் வீட்டுத்தோட்டத்தில் காய்கறிகள், கீரைகள் வளர்ப்பு குறித்து பேசுகையில்,கடைகளில் வாங்குகிற விதைகளைவிட நாட்டுவகை விதைகள் பூச்சி, நோய் தாக்குதலின்றி வளரக்கூடியவை. நமது நாட்டுக்காய்கறிவகைகளில் ஊட்டச்சத்து மிகுந்துள்ளது. விலை மிகக்குறைவாகவும், எளிதாகக் கிடைக்கக் கூடியதாகவும் உள்ளன. பன்னாட்டு நிறுவனங்கள் அளிக்கின்ற விதைகள், விதைகளே இல்லாத காய்களையும், கனிகளையும் உருவாக்கக் கூடியதாகவே உள்ளன.

விதைகளே இல்லாத காய்கறிகள் மரபு ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தும். அத்தகைய விதைகளை உருவாக்குவதற்கு எதற்காக ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். இயற்கை விதைகளை உற்பத்தி செய்கிற போது, நமக்கு வீடுகளுக்குத் தேவையான காய்கறிகளை நஞ்சில்லாத வகையில் நாமே உருவாக்கிக் கொள்ள முடியும். வீட்டுக்கழிவுகளைக் கொண்டே அவற்றிற்குத் தேவையான, ரசாயானக் கலப்படமில்லாத இயற்கைவழி உரங்களை அதிக செலவின்றி, நாமே தயாரித்துக் கொள்ளமுடியும் என்றார். தொடர்ந்து இருமடிப்பாத்தி, வட்டப்பாத்தி, மேட்டுப்பாத்தி, நிரந்தரவேளாண்மை ஆகியனகுறித்து செயல்முறையில் விளக்கமளித்தார்.

பயிற்சியில் சூழலியலாளர் ரமேஷ் கருப்பையா பேசுகையில், நமது உணவு, நமது உழைப்பின் மூலம் கிடைக்கப் பெறும்போது, முதலில் நஞ்சில்லாத உணவை உட்கொள்ள முடியும். அழிந்து வருகிற மரபு வகை விதைகளை ஒவ்வொரு வீடுதோறும் பாதுகாக்க முடியும். இயற்கைவழி வேளாண்மை முறைகளை ஒவ்வொருவரும் எளிமையாகப் பின்பற்ற காய்கறி வளர்ப்பு முறை சிறந்த அனுபவமாக அமையும். நமது வீட்டுக்குப்பைகளை நாமே உரமாக்கிக் கொள்வதன்மூலம், குப்பை களுக்குத் தீர்வுகாணமுடியும். இரசாயண உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அதிகப்படியான மக்களுக்கு உடல்நலச் சீர்கேடு ஏற்பட்டுவருகிறது.

மருத்துவச் செலவைக் குறைப்பதற்கு இயற்கைவழி வேளாண்மை மிகச்சிறந்த வழிமுறையாக உள்ளது. இந்தியாவில் சிக்கிம் மாநிலம்தான் முதன்முறையாக முற்றிலும் இயற்கைவழி வேளாண்மைக்கு மாறிவிட்ட மாநிலமாக திகழ்கிறது. கேரளா, ஆந்திரம்,கர்நாடகம் போன்ற மாநிலங்கள் இயற்கைவழி வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழகத்தில் தனியார் அமைப்புகளின்றி, அரசால் இயற்கை வழி வேளாண்முறைகளைப் பின்பற்ற முக்கியத்திட்டங்கள் வகுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உப்போடை கார்த்திக், கொளக்குர் சதீஸ், ஓலைப்பாடி குரு ஆகியோர் செய்திருந்தனர். முன்னோடி உழவர்களான எளம்பலூர் ஆறுமுகம், மேலப்புலியூர் இளையராஜா உள்ளிட்ட நூற்றுக்கணக்கான விவசாயிகள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் அழிந்துவரும் அரியவகை காய்கறி, கீரை விதைகள் குறித்த சிறப்புக்கண்காட்சி நடத்தப்பட்டது.

## கரூர் பண்டுதகாரன்புதூரில் 7ம் தேதி இலவச ஆடு வளர்ப்பு பயிற்சி

கரூர், : மண்மங்கலம் பண்டுதகாரன்புதூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி, ஆராய்ச்சி மைய பேராசிரியர் வசந்தகுமார் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: மண்மங்கலம் பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி, ஆராய்ச்சி மைய வளாகத்தில் வரும் 7ம்தேதி (செவ்வாய்) செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி நடைபெற உள்ளது.

இதில் அறிவியல் ரீதியான ஆட்டினங்களை தேர்வு செய்தல், இனப்பெருக்கம், ஆடுவளர்ப்பில் பராமரிப்பு முறைகளான பரண்மேல் கொட்டகை அமைத்தல், தீவன மேலாண்மை, ஆடுகளுக்கேற்ற பசுந்தீவன உற்பத்தி, மேய்ச்சல் தரைஅமைப்பு, ஆடுகளை தாக்கும் நோய்கள், அவற்றை தடுக்கும் முறைகள், மூலிகை மருத்துவ சிகிச்சைமுறைகள், அசோலா வளர்ப்பு, மலிவுவிலை கலப்பு தீவன தயாரிப்பு, பண்ணை பொருளாதாரம், விற்பனை உத்திகள், வங்கி கடன் உதவி, பண்ணைக்கான காப்பீடு ஆகிய தலைப்புகளில் பயிற்சி வழங்கப்படஉள்ளது. இது குறித்து அலுவலக தொலைபேசி 04324 294335 என்ற எண்ணில் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து கொண்டு அன்று காலை 10.30 மணிக்கு பயிற்சி மைய வளாகத்திற்குள் வரவேண்டும்.

**கம்பு பயிரிட்டால் காசு பார்க்கலாம் வேளாண்துறை அட்வைஸ்**

பழநி, : பழநி, : கம்பு பயிரிட்டால் காசு பார்க்கலாம் என வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

பழநி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் தற்போது விவசாய பணிகள் துவங்கி உள்ளன. தற்போது இறவை பாசன வசதி உள்ள விவசாயிகள் கம்பு பயிரிடுவதற்கு ஏற்ற தருணமாகும். கம்புக்கு கோ-7, கோ (சியு) 9, ஐசிஎம்வி-221, ராஜ்-171, எக்ஸ்-7 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். ஹெக்டேருக்கு 3.75 கிலோ விதை தேவைப்படும். நாற்றாங்கால் ஹெக்டேருக்கு 7.5 சென்ட் அளவிற்கு இருக்க வேண்டும். 3*1.5 மீட்டர் அளவு கொண்ட 6 படுக்கைகள் 1 சென்டில் அமைத்து அரை மீட்டர் கால்வாய் அரை அடி ஆழத்தில் ஒவ்வொரு படுக்கையை சுற்றி அமைக்க வேண்டும்.

ஹெக்டேருக்கு 750 கிலோ தொழுஉரம் இட வேண்டும். தேன் ஒழுகல் நோய் பாதிக்த விதைகளை நீக்க 10 லிட்டர் நீரில் 1 கிலோ உப்பினை கரைக்து விதைகளை அதில் கொட்டி மிதக்கும் விதைகளை நீக்க நல்ல தண்ணீர் கொண்டு 3,4 முறை விதைகளை கழுவி பின்பு நிழலில் உலர்த்த வேண்டும். தண்டு ஈ மற்றும் தண்டு துளைப்பான் நோய் தாக்காமல் இருக்க குளோரிபைபாஸ் 36 டபிள்யூ.எஸ்.வி அல்லது பாசலோன் 35 இசி 4 மில்லியுடன் 5 கிராம் பசை

இவற்றை 20 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைக்க வேண்டும். அடிச்சாம்பல் நோய் தாக்காமல் இருக்க மெட்டலாக்சில் 6 கிராம் உடன் 5 மில்லி தண்ணீர் கலந்து 1 கிலோ விதையுடன் கலக்க வேண்டும்.

விரல்களால் 1 சென்டிமீட்டர் ஆழத்திற்கு கோடுகள் இட்டு, 1 படுகைக்கு அரை கிலோ விதையினை தூவி மண்ணில் மூட வேண்டும். மிதைல் பாரதியான் மருந்தினை விதைத்தவுடன் தூவி எறும்புகளிலிருந்து பாதுகாக்கலாம். நாற்றுக்களை தண்டு ஈயிலிருந்து காப்பதற்கு கார்போபியூரான் 3ஜி 600 கிராம் கலந்து தூவி விட வேண்டும். 30 சென்டிமீட்டர் கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மண்ணில் நீர் உறிஞ்சிக்கொள்ளும் வரை மட்டும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். 6 மீட்டர் உள்ள பார்கள் 45 சென்டிமீட்டர் இடைவெளியில் அமைக்க வேண்டும். இடைவெளி 45*15 சென்டிமீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தியபடி உரங்கள் இட வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

# மாவட்டம் முழுவதும் பரவலாக மழை: தளியில் 100 மில்லி மீட்டர் பதிவானது



கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. அதிக பட்சமாக தளியில் 100 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

## பலத்த மழை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த மாத தொடக்கம் முதல் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக மழை இன்றி வெயில் மக்களை வாட்டி வதைத்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை மாவட்டம் முழுவதும் பரவலாக பலத்த மழை பெய்தது. கிருஷ்ணகிரி, பர்கூர், ஓசூர் மற்றும் சுற்று வட்டாரத்தில் சுமார் ஒரு மணி நேரம் மழை கொட்டி தீர்த்தது.

இதில் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழை காரணமாக கிருஷ்ணகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை எதிரில் உள்ள புளிய மரம் வேரோடு சாய்ந்தது. அந்த நேரத்தில் அங்கு யாரும் செல்லாததால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது.

மழை அளவு

நேற்று காலை 8 மணி நிலவரப்படி மாவட்டம் முழுவதும் பெய்த மழை அளவு மில்லிமீட்டரில் வருமாறு:–

தளி – 100, கிருஷ்ணகிரி – 47, ஓசூர் – 46, ராயக்கோட்டை – 15, ஊத்தங்கரை – 9, சூளகிரி – 6, அஞ்செட்டி – 6. மாவட்டம் முழுவதும் மொத்தம் 229 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.